CC.No.118/2025
PW – 4
22.07.2026
பெயர் : அண்ணாமலை
த/பெ. : சொக்கலிங்கம்
எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

**<u>மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கோவிந்தம்மாள் மயங்கி கீழே விழுந்து அவரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்று சொன்னால் சரிதான். அவர் மயங்கி கீழே விழுந்ததில்தான் அவருக்கு காயம் ஏற்பட்டதாக நான் தெரிந்து கொண்டேன். ஏற்கனவே நான் சாட்சியம் அளித்தசங்கதிகளை போலிசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் தான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான்.

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

25.03.2026ம் தேதியில் தான் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேன். நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துவிட்டு சென்றபோது எதிரிகள், கோவிந்தம்மாளின் உறவினர்களுடன் சமாதானமாக சென்று இழப்பீடும் கொடுத்துவிட்டதால் நான் முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகளுக்கு முரணாக தற்போது முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/–அண்ணாமலை

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**